எதிர்க்கட்சித் தலைவர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு குறிவைக்கும் போக்கு!

# நேஷனல் ஹெரால்ட் வழக்கில் மீண்டும் அம்பலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

புதுடெல்லி, டிச. 17-

**ஒன்றிய பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சித் தலைவர்களை குறி வைத்து தவறாகப் பயன்படுத்துவதை நேஷனல் ஹெரால்டு வழக்கில் நீதித்துறை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

நேஷனல் ஹெரால்டு வழக்கில், எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறி வைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு மத்திய அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்துவதை நீதித்துறை மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தியுள்ளது.

எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லாமல், அரசியல் போட்டியாளர்களை துன்புறுத்துவதற்கும், கேவலப்படுத்துவதற்கும் மட்டுமே இத்தகைய வழக்குகள் தள்ளப்படுகின்றன.

அவர்களின் பக்கம் உண்மை உள்ளதாலும் மற்றும் பயம் இல்லாமல் உள்ளதாலும், நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், என் சகோதரர் ராகுல் காந்தி பக்கம் நியாயப்படுத்தப் பட்டுள்ளது.

மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களில் உறுதியாக நிற்கும் காந்தி குடும்பத்தை வேட்டையாடுவதில் பா.ஜ.க. தொடர்ந்து முனைந்தாலும், அதை பொறுத்துக்கொள்ள முடியாது.

மீண்டும் மீண்டும், இந்த பழி வாங்கும் அணுகுமுறையானது முதன்மையான புலனாய்வு நிறுவனங்களின் நம்பகத்தன்மையை களங்கப்படுத்துகிறது மற்றும் அவற்றை வெறும் அரசியல் மிரட்டல் கருவிகளாக குறைக்கிறது.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

---

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# இளையான்குடி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் 3000 பேருக்கு அறுசுவை உணவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்! மு.தென்னவன் – தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு

சிவகங்கை. டிச.17-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மெய்யனேந்தல் யாரைக் கோட்டையில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கா வெங்கட்ராமன் ஏற்பாட்டின் பேரில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு 3000 பேருக்கு அசைவ விருந்து நடைபெற்றது. இந்த அசைவ விருந்தினை சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையேற்று துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் மூ.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ.மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் பேசினர் கள். இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் எம் எல்ஏ சுப.மதியரசன், செயற்குழு உறுப்பினர்அ.முகம் மது,, பொதுக்குழு உறுப்பினர் த. உதயகுமார் பேரூராட்சி மன்ற தலைவர் பி.ஏ.நஜ்மூதீன், ஒன்றிய செயலாளர்கள் ஆறு. செல்வ ராஜன், வே.தமிழ் மாறன் ஆகியோர்

முன்னிலை வகித்தார்கள். முன்னதாக ஒன்றிய இளை ஞரணி அமைப்பாளர் சௌந்தர் வரவேற்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாரியப்பன் கென்னடி மாவட்ட சிறுபான்மை அணி தலைவர்நாசர், மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம்.முருகானந்தம், தலைமைகழக பேச்சாளர் அய்யாசாமி நிர்வாகிகள் சையது கான், யாசின், ப சேகர் இலக்கிய அணி அமைப்பாளர் ,கவிஞர் சிவமுத்து வளவன், மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள்மு. மலைமேகு, ராஜபாண்டி சுப.சேதுபதி துரை ,திருமதி ராஜேஸ்வரி பார்த்தசாரதி, துணைச் செயலாளர்கள் சண்முகம் ,இருளாயி ராஜபாண்டி, பொருளாளர் குழந்தை பாண்டியன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பே. தமிழ்ச்செல்வன், பால முரளி, ஜெய்சங்கர், முத்துப் பாண்டி ,லெனின், சரத்குமார், சதீஷ் ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.எம். பொற்கோ,கேஎஸ்மகாதீர், கார்த்தி, ஆர்.சேதுபதி ராஜா, எஸ். எம். மதிவாணன் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாலச்சந்தர் நன்றி கூறினார் .முன்னதாக மாவட்ட அளவில் 32 கபடி அணி வீரர்கள் பெற்ற கபடி விளையாட்டு போட்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்தார்.

இந்த கபடி போட்டியில் சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், விருதுநகர் ,தஞ்சாவூர் ,தேனி ,உட்பட 32 மாவட்ட கபடி விளையாட்டு வீரர்கள் பங்கேற்றார்கள் நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளையான்குடி மேற்கு செயலாளர் கா. வெங்கட்ராமன் தலைமையில்ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

---

நீண்டகால கோரிக்கைகளை செயல்பாட்டுக்கு கொண்டு வந்து

# விக்கிரவாண்டி தொகுதியில் பல்வேறு புதிய திட்டங்கள் நிறைவேற்றம்!

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

விழுப்புரம், டிச. 17-



விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா, குறுகிய காலத்தில் பல்வேறு புதிய திட்டங்களைத் தொகுதிக்கு கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்.

இது குறித்து அவரது அறிவிப்பில், விக்கிரவாண்டி தொகுதிக்கு குறுகிய காலத்தில் பல அரசு திட்டங்களை கொண்டு வந்து, செயல்பட்டு வருகிறது. தொகுதியின் நீண்டகால கோரிக்கையான, அரசு கலைக் கல்லூரியை கொண்டு வந்து, இந்தாண்டே கல்லூரி தொடங்கி செயல்படுகிறது.

விக்கிரவாண்டியில் தீயணைப்பு நிலையம், நான்கு வழிச் சாலை மேம்பாலம், நந்தன் கால்வாய் புனரமைப்பு திட்டத்திற்கு நிதி ஒதுக்கி அறிவிப்பு, சங்கராபரணி ஆற்றில் 30 கோடி ரூபாயில் தடுப்பணை, திருவாமாத்துார் கோவிலில் 4 கோடி ரூபாயில் மண்டபம் என பல புதிய திட்டங்களை தொகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், விழுப்புரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக, விழுப்புரம் கோவிந்த சாமி மணி மண்டபத்தில் போட்டித் தேர்வுக்கு இலவச பயிற்சி மையம், தமிழக அரசு சார்பில் வானூரில் பாரதிதாசனுக்கு மணி மண்டபம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கி அறிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் காவல் நிலையங்களில் 50 ஆண்டுகள் கிடப்பில் இருந்த எல்லை பிரச்சினை தீர்க்கப்பட்டு தற்போது அரசாணை வெளியிடப்பட்டது. விக்கிர வாண்டி, காணை ஒன்றியங்கள் பிரித்து, புதிய கஞ்சனூர் ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொகுதிக்காக அடிக்கடி முதல்வரை சந்தித்து கோரிக்கை வைப்பதோடு, அதனை துறை சார்ந்த செயலர்களிடம் அறிவுறுத்தி, திட்டங்களை கொண்டு வந்து சேர்த்துள்ளார் என தெரிவித்துள்ளார்..

---

# நெல்லை மேற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் சிறப்புரையாற்றினார்!

நெல்லை.டிச.17-

நெல்லை மேற்கு மாவட்டக் கழகக் செயற்குழுக் கூட்டம் கடந்த 15ஆம் தேதி அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் கலந்து கொண்டு பல்வேறு கழக ஆக்கப் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்துப் பேசினார்.

நெல்லை மேற்கு மாவட்ட கழக அலுவலகம், டாக்டர்.கலைஞர் அரங்கத்தில் மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், தொகுதி பார்வையாளர்கள் ஜோசப் ராஜ் - அம்பாசமுத்திரம், கணேஷ்குமார் ஆதித்தன் - ஆலங்குளம், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி,தமிழ்ச் செல்வன் ஆகியோர் முன்னிலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் இராமச்சந்திரன்,அபூபக்கர்,கணேசன், சமுத்திர பாண்டியன்,கதிர் வேல் முருகன், ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.சிவனுபாண்டியன் (எ) பரணிசேகர்,முத்து பாண்டி (எ) பிரபு, முத்து கிருஷ்ணன்,செல்லத்துரை சிவக்குமார்,சமுத்திரபாண்டியன், சிவன் பாண்டியன், பொன்செல்வன், ஜெயக்குமார், மகேஷ் மாயவன், குமார், மாரிவண்ண முத்து,நகர செயலாளர்கள் பிரபாகரன், கணேசன், பேரூர்செயலாளர்கள், முத்து கணேசன்,இசக்கி பாண்டி, சுப்பையா, மணிஷா செல்வ ராஜ், சிந்தா மதார்,மணிகண்டன், வானுவாமலை, அழகேசன், லஷ்சுமணன், நெல்சன்,ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்!

நெல்லை.டிச.17-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வள்ளியூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நேற்று (16.12.2025) நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழிக்காட்டுதலின்படி,

நெல்லை கிழக்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் நேற்று (16.12.2025) காலை 10 மணிக்கு மாவட்ட கழக அலுவலகம், வள்ளியூரில் நடைபெற்றது.

மாவட்டப் பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள்,மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குசாவடி குறித்து ஆலோசிக்கப்பட்டது.

---

### திருப்பத்தூர் மாவட்டம்

## நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியச் செயலாளர் டி.சாமுடி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **ஆர்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி** (கெங்கையம்மன் கோயில் தெரு, ராமநாயக்கன் பேட்டை – அஞ்சல், வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம்) அவர்கள் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியக்கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** — **துரைமுருகன்**
சென்னை- 600 018. — பொதுச்செயலாளர்,
நாள்: 16.12.2025 — தி.மு.க.

---

# துறைமுகத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை,டிச.17–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 299 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (15.12.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60 அ, அன்னை சத்யா நகர், B.C பகுதி. 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54அ, உட்வார்ப், 1வது கேட், வால்டாக்ஸ் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இது தான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

---

சிவகங்கை மாவட்டம் சிராவயலில்

# காந்தியடிகள் - தோழர் ஜீவானந்தம் சிலைகள் வடிவமைக்கும் பணி!

## அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டார்!

சிவகங்கை, டிச.17-



சிவகங்கை மாவட்டம், சிராவயலில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் “காந்தியடிகள் ஜீவா நினைவு அரங்கில்” நிறுவப்படவுள்ள அண்ணல் காந்தியடிகள் தோழர் ஜீவானந்தம் (ஜீவா) சிலைகள் வடிவமைக்கும் பணியினை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டார்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசப்பிதா காந்தியடிகள் மற்றும் பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் (ஜீவா) ஆகியோர் சந்தித்துப் பேசிய வரலாற்றுச் நிகழ்வை போற்றும் வகையில், சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் நினைவு அரங்கம் அமைக்க தமிழ்நாடு அரசு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டது.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில், காந்தியடிகள் மற்றும் ஜீவா ஆகியோர் சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பின் நினைவாக அவ்விடத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 06.08.2023 அன்று திருப்பூரில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாட்டில் காணொலிக் காட்சி வாயிலாகக் கலந்து கொண்டு மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, 2023 2024 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறையின் திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில், ரூ.3,00,00,000/ (ரூபாய் மூன்று கோடி மட்டும்) மதிப்பீட்டில் நினைவு அரங்கம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண்.249 வெளியிடப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நாச்சியாபுரம் உள்வட்டம், சிராவயல் கிராமத்தில் இதற்கென தேர்வு செய்யப்பட்ட 0.20.0 ஹெக்டேர் (சர்வே எண் 326/6) நிலத்தில் இந்த நினைவு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

---

‘முரசொலி’ முன்னாள் மேலாளர் – ஆடுதுறை மு. உத்திராபதி மைத்துனர்

# ஜி.இளங்கோ முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

சென்னை டிச.17-



‘முரசொலி’ அலுவலகத்தில் மேலாளராக பணியாற்றிய ஜி. இளங்கோ அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (17.12.2025) கடைப்பிடிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் உடல் நலக் குறைவினால் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மறைவு எய்திய ஜி. இளங்கோ முரசொலியில் எழுத்தர், மேலாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது சகோதரியின் கணவர் -கழக இலக்கிய அணி துணை செயலாளர் வழக்கறிஞர் ஆடுதுறை உத்திராபதி ஆவார்.

நாகப்பட்டினத்தில் உள்ள அவரது இல்லத்தில் கடைப்பிடிக்கப்படும் முதலாமாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்கின்றனர்.

---



திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் சின்ன செவலை ஊராட்சியில் பூத் எண் 275 –ல் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி நிகழ்ச்சியில் கழக துணை பொதுச்செயலாளர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு தேர்தல் பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார். நிகழ்ச்சியில் சு. விசுவநாதன், கை.ரா.சடகோபன், கு.ஓம்சிவசக்திவேல், பூக்கடை கணேசன், ஏழுமலை, ராம்குமார், நடராஜன். பழனி, விசு, நிர்மல்ராஜ், சி.டி.பாலு, கிருஷ்ணராஜ், துணை அமைப்பாளர் பாலாஜி, பாலாஜி BDA கோகுல் விசுவநாதன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி அம்முண்டியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அரவையை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, ஒன்றிய கழக செயலாளர் எஸ்.தணிகாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.